தமிழ்நாடு
மாநில தேர்தல் ஆணையம்

கி.பாலசுப்ரமணியம், இ.ஆ.ப.,
செயலாளர்

208/2, ஜவஹர்லால் நேரு சாலை,
(கோயம்பேடு பேருந்து நிலையம் எதிரில்)
அரும்பாக்கம், சென்னை-600 106.

ந.க.எண்.3376/2024/ந.தே.2, நாள். 25-07-2024

பெறுநர்

1) மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித் தலைவர் (வளர்ச்சிப்பிரிவு).
திருநெல்வேலி, நாகப்பட்டினம், கன்னியாகுமரி மற்றும்
தேனி மாவட்டங்கள்.
2) மாநகராட்சி ஆணையர், திருநெல்வேலி மாநகராட்சி.
3) தேர்தல் நடத்தும் அலுவலர்கள், நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல்கள் (தொடர்புடைய மாவட்ட தேர்தல் அலுவலர் மூலமாக)

அய்யா / அம்மையீர்,

பொருள் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு - மறைமுகத் தேர்தல்கள் -மாநகராட்சி மேயர், நகராட்சி வரிவிதிப்பு மேல்முறையீடு குழு உறுப்பினர், பேரூராட்சி துணைத் தலைவர், வரிவிதிப்பு மேல்முறையீடு குழு உறுப்பினர் மற்றும் நியமனக்குழு உறுப்பினர்களுக்கான தற்செயல் காலியிடங்கள் - தேர்தல் நடத்துதல் - தொடர்பாக

பார்வை 1.மாவட்டங்களிலிருந்து அறிக்கை மூலம் தெரிவிக்கப்பட்ட காலியிட விவரங்கள்
2.நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான மறைமுகத் தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கான அறிவுரைக் கையேடு (கையேடு 9)
3.இவ்வாணைய சட்டபூர்வ ஆணை 06/2024.தநா.மா.தே.ஆ/ந.தே.2 நாள். 25-07-2024

*****

பார்வை 3-ல் காணும் சட்டபூர்வ ஆணையில், இராஜினாமா மற்றும் இறப்பு போன்ற காரணங்களால் மறைமுகத் தேர்தல்கள் ஏற்பட்டுள்ள மாவட்டங்களில், மாநகராட்சி மேயர் நகராட்சி வரிவிதிப்பு மேல்முறையீடு குழு உறுப்பினர். பேரூராட்சி துணைத் தலைவர், வரிவிதிப்பு மேல்முறையீடு குழு உறுப்பினர் மற்றும் நியமனக்குழு உறுப்பினர்களுக்கான தற்செயல் காலிப்பதவியிடங்களுக்கான மறைமுகதேர்தல்கள் 05.08.2024 அன்று நடத்திட ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

2) மேற்படி நடைபெறவுள்ள மேயர், துணைத் தலைவர், வரிவிதிப்பு மேல்முறையீடு குழு உறுப்பினர்கள் மற்றும் நியமனக்குழு உறுப்பினர்களுக்கான மறைமுகத் தேர்தல்களுக்கு தொடர்புடைய தேர்தல் நடத்தும் அலுவலர்களால் பின்வருமாறு கூட்டம் கூட்டப்பட வேண்டும்.

| பதவியிடங்கள் | நாள் நேரம் |
| --- | --- |
| மேயர் தேர்தலுக்கான கூட்டம் தொடங்கும் நேரம் | 05.08.2024 முற்பகல் 10.30 மணி முதல் |
| துணைத் தலைவர், வரிவிதிப்பு மேல் முறையீடு குழு உறுப்பினர்கள் மற்றும் நியமனக் குழு உறுப்பினர்கள் தேர்தலுக்கான கூட்டம் தொடங்கும் நேரம் | 05.08.2024 பிற்பகல் 02.30 மணி முதல் |

3) தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் விதிகள், 2023 விதி 112 (5)-ன்படி, மறைமுகத் தேர்தலுக்கான கூட்ட அறிவிப்பு தேர்ந்தெடுக்கப்பட்ட வார்டு உறுப்பினர்களுக்கு குறைந்தது ஏழு முழுமையான நாட்களுக்கு (7 Clear days) முன்னதாக சார்வு செய்யப்பட வேண்டும் என்பதால் தேர்தல் நடத்தும் அலுவலர், மேற்படி அறிவிப்பினை 28.07.2024 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து வார்டு உறுப்பினர்களுக்கும் (போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்ட வார்டு உறுப்பினர்கள் உட்பட) உரியவாறு சார்வு செய்ய துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மறைமுகத் தேர்தலுக்கான அறிவிப்பு இணைப்பு 1-ல் கொடுக்கப்பட்டுள்ளது. உறுப்பினர்களுக்கு சார்வு செய்த விவரத்தினை 29.07.2024 அன்று இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4) மறைமுகத் தேர்தல் கூட்டத்தினை அமைதியாக நடத்திட காவல்துறை அலுவலர்களுடன் கலந்தாலோசித்து வேண்டிய பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டிடவும், மறைமுகத் தேர்தல் கூட்ட நடவடிக்கை முழுமையையும் CCTV மூலம் பதிவுகள் மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்படுகின்றது.

5) மாநகராட்சி மேயர் பதவியிடத்திற்கான இட ஒதுக்கீட்டினை அரசிதழின்படி, சரிபார்த்து தேர்தல் கூட்டம் நடத்துவதற்கான அறிவிப்பில் தேர்தல் நடத்தும் அலுவலர் உரியவாறு வெளியிட வேண்டும் எனவும், இதில் தவறு ஏற்படின், தேர்தல் நடத்தும் அலுவலரே முழு பொறுப்பாவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும், பார்வை 2-ல் காணும் கையேட்டினையும், நகர்ப்புற உள்ளாட்சி சட்டத்தினையும், நகர்ப்புற உள்ளாட்சி விதிகளையும் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் நன்கு படித்தறிந்து மறைமுகத் தேர்தல் கூட்டத்தினை சட்டம்/விதிகளின்படி நடத்தி முடித்திட அறிவுறுத்தப்படுகிறது.

6) தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் விதிகள், 2023, விதி 112(6)-ன்படி மறைமுக தேர்தல் கூட்டத்திற்கு குறைவெண் வரம்பின்மை (Quorum) கணக்கிடும்போது தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில், பெரும்பான்மையான உறுப்பினர்கள் (பாதிக்கு மேல்) வருகை புரிந்திருக்க வேண்டும். வரம்பிற்குரிய உறுப்பினர்கள் இருந்தால் அன்றி தேர்தல் கூட்டத்தினை நடத்தக் கூடாது.

7) தேர்தல் நடைபெறும் கூட்ட அரங்கில் தேர்தல் நடத்தும் அலுவரைத் தவிர மற்றவர்கள் கைபேசி எடுத்துச்செல்ல அனுமதிக்க கூடாது. ஆபத்தை விளைவிக்கக் கூடிய ஆயுதங்கள் / உபகரணங்கள் (பேனா உட்பட) கூட்ட அறைக்குள் எவரும் எடுத்துச் செல்ல அனுமதிக்கக் கூடாது. இதனை காவல் துறை அலுவலர்கள் தக்கவாறு உறுதி செய்திட உரிய அறிவுரைகள் வழங்குமாறு மாவட்ட தேர்தல் அலுவலர்கள் / மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

8) மறைமுகத் தேர்தல் நடத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் உரிய நாளில் மேற்கொண்டிருப்பதை தொடர்புடைய மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்கள் தனிக் கவனம் செலுத்தி ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிட அறிவுறுத்தப்படுகின்றது.

9) தேர்ந்தெடுக்கப்பட்ட மேயர் பற்றிய விவரங்களை இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள படிவம் I- லும், துணைத் தலைவர் பற்றிய விவரங்களை இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள படிவம் II-லும், வரிவிதிப்பு மேல்முறையீடு குழு உறுப்பினர்கள் பற்றிய விவரங்களை இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள படிவம் III-லும், நியமனக்குழு உறுப்பினர்கள் பற்றிய விவரங்களை இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள படிவம் IV-லும் தயாரித்து இவ்வாணையத்திற்கு மின்னஞ்சல் மூலமாக அனுப்பி வைத்திடல் வேண்டும். மேலும், மேற்படி விவரங்களை தொலைபேசியிலும் இவ்வாணையத்திற்கு தெரிவித்திடல் வேண்டும்.

இணைப்பு - மேற்கண்டவாறு

BALASUBRAMAN

25-07-2024

SECRETARY

**நகல்**

மாநில தேர்தல் அலுவலர்/நகராட்சி நிர்வாக இயக்குநர்,

சென்னை -600 028.

மாநில தேர்தல் அலுவலர்/பேரூராட்சிகளின் இயக்குநர்,
சென்னை -600028.

அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைசென்னை 600 009.

தொடர்புடைய நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள்/
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள்

இணைப்பு - 1

ந.க.எண்.3376/2024/எம்.இ,2, நாள். 25-07-2024

**தேர்தல் கூட்டம் நடத்துவதற்கான அறிவிப்பு**

………………………… மாநகராட்சி மேயர் / துணை மேயர் தேர்தல்

……………………………… நகராட்சி தலைவர் / துணைத்தலைவர் தேர்தல்

…………… ………………………………… பேரூராட்சி தலைவர் / துணைத்தலைவர் தேர்தல்

………………………… மாநகராட்சி / நகராட்சி / பேரூராட்சி

………………………… குழு தலைவர் / உறுப்பினர் தேர்தல்

**அறிவிப்பு**

………………………… மாநகராட்சி மேயர் / துணை மேயர் தேர்ந்தெடுப்பதற்காக

……………………………… நகராட்சி தலைவர் / துணைத்தலைவர் தேர்ந்தெடுப்பதற்காக

…………………………………… பேரூராட்சி தலைவர் / துணைத்தலைவர் தேர்ந்தெடுப்பதற்காக

………………………… மாநகராட்சி / நகராட்சி / பேரூராட்சி

………………………… குழு தலைவர் / உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பதற்காக

உறுப்பினர்களின்கூட்டம்……………………………………………அன்று………………………மணிக்கு நடைபெறும்.

நகர்ப்புற உள்ளாட்சி சட்டத்தின்படி இப்பதவி ஆதிதிராவிடர் இனத்தவருக்கு / பழங்குடி இனத்தவருக்கு / ஆதிதிராவிட இன பெண்களுக்கு / பழங்குடி இன பெண்களுக்கு /பெண்கள் (பொது)-க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவே, மேற்படி சட்டத்தின்படி, மேலே கூறப்பட்ட இனத்தவர் / இனத்து பெண்கள் / அனைத்து பிரிவு பெண்கள் மட்டுமே இத்தேர்தலில் போட்டியிடலாம்.

நகர்ப்புற உள்ளாட்சி சட்டத்தின்படி இப்பதவி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. எனவே, இப்பதவியிடத்திற்கு அனைத்து பிரிவினரும் போட்டியிடலாம்.

1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் (நிலைக்குழுக்கள் அமைப்பு) விதிகளின் விதி 5-ன்படி இப்பதவி பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்படி விதிகளின்படி பெண்கள் மட்டுமே இப்பதவிக்கான தேர்தலில் போட்டியிடலாம்.

2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகளின் விதி 111,112-ன்படி இக்கூட்டம் கீழே கையொப்பமிட்ட என்னால் கூட்டப்பட்டு தலைமை வகித்து நடத்தப்படும்.

இக்கூட்டம்…………………………………………………… அலுவலக கட்டடத்தில் நடைபெறும். தவறாமல் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அனைத்து வார்டு உறுப்பினர்களும் கோரப்படுகிறார்கள்.

இடம் -

நாள் -

தேர்தல் நடத்தும் அலுவலர்

குறிப்பு - பொருத்தமற்ற பகுதிகளை / வரிகளை நீக்கிவிடவும்.

BALASUBRAMANIAM
25-07-2024
SECRETARY

Rc.No.3376 /2024/ME2, dated 25-07-2024

**URBAN LOCAL BODY ELECTIONS -2024**

**FORMAT - I**

**Indirect Election – Mayor Election**

Name of the District: ____________

| Name of the Local Body | Local Body type (Municipal Corporation / Municipal Council/Town Panchayat) | Seat reserved for (SC(G)/ SC(W)/ST(G) /ST(W)/W(G) /Gen. | Name of the elected Mayor/ Chairperson | Which Ward he/she elected | Name of the party |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

District Election Officer/District Collector.

-----------------------------------------------------------------------------------

**FORMAT - II**

**Indirect Election – Vice Chairperson Election**

Name of the District: ____________

| Name of the Local Body | Local Body type (Municipal Council/Town Panchayat) | Name of the elected Vice Chairperson | Which Ward he/she elected | Name of the party |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |

District Election Officer/District Collector.

-----------------------------------------------------------------------------------

## FORMAT - III

Details of election of Members of Taxation Appeal Committee held on ______

Name of the District: ___________

| Name of the Local Body | Type of Local Body (Municipal Corporation /Municipal Council/Town Panchayat) | Name of the elected Members | Elected unopposed or by Contest | Ward from which he/she was elected | Party | Remarks |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |

District Election Officer/District Collector.

---

## FORMAT - IV

Details of election of Member of Appointment Committee held on ______

Name of the District: ___________

| Name of the Local Body | Type of Local Body (Municipal Corporation /Municipal Council/Town Panchayat) | Name of the elected Members | Elected unopposed or by Contest | Ward from which he/she was elected | Party | Remarks |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |

District Election Officer/District Collector.

---

BALASUBRAMANIAM
25-07-2024
SECRETARY